ஓம் சரவண பவ

**ஆறுமுக அரங்கமகா தேசிகர் அவர்களின் ஆசி அறிவுரை நூல்**

04.10.2024

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடி வணங்கி அரங்கமகா ஞானியர் யானும்
ஞானமுடன் அருளாசி விளக்கம் தன்னை
நாட்டிடுவேன் பிரணவக் குடிலுக்கும்

2. குடிலொடு நிர்வாகிகட்கும்
குறையில்லாத தொண்டர் பெருமக்கட்கும்
குடிலின் அன்னதான சேவைக்கும்
கூறிடுவேன் அரங்கன் யான்

3. குரோதி ஆண்டு நங்கை திங்களில்
அருளாசி விளக்கம் தன்னை
தன்னிலே மாதர்ம சக்தியாகி
ஓங்காரக்குடில் தரணியே வியக்க

4. அற்புதம் நடத்த இருக்க
இருக்கவே நிர்வாகிகட்கும்
என் தொண்டர் பெருமக்கட்கும்
இன்னும் பணிசுமை கூடுமப்பா

5. நிலமதனில் ஆனாலும் அரங்கன் யான்
அற்புதம்பட ஆக்கம் தந்து
அவர்கள் இயக்கத்துக்கு உறுதுணையாய் இருந்து
தேக மனபலம் கூட்டி

6. அன்னவர்கள் இலகுவாக இந்த
சேவைகளை சிறப்பாய் செய்து
முடிக்க அருள் செய்வேன்
அருளவே ஓங்காரக்குடில் நோக்கி

7. ஞானபலம் மிக்க தொண்டர்களும்
தனபலம் மிக்கவர்களும்
பொருள் வளம் மிக்கவர்களும்
சீமான்களும் அரங்கன் என் சக்தி அறிந்து

8. என்னை தேடி வருகின்ற காலம்
கனிந்து கொண்டிருக்க

அப்பனே குடிலின் செயல்பாடுகளெல்லாம்
உலகே மகா சக்திகள் வியந்து நோக்கும்படி

9. செயல்கள் மாற இருக்க
என் தொண்டர் பெருமக்களே
நிர்வாகிகளே உங்களுக்கு அரங்கன் யான்
இன்னும் சக்தியூட்டி ஆக்கம் தந்து

10. சயன வழியும் தியான வழியும்
சூட்சும வழியும் சக்தியூட்டி
காத்தருள் புரிவேன்
அருளவே குடிலின் தர்மத்துக்கு

11. அளவில்லா வண்ணம் பொருளாதார
பலம் கூட்டியும் தொண்டர் படைகளை
இன்னும் பெருக்கியும் தேவைக்கு ஏற்றவாறு
பொருளாதார பலமும் தேவைக்கு ஏற்றவாறு

12. வாகன சௌகரியங்களும் ஆள்மாகாணங்களும்
அப்பனே அளவில்லா வண்ணம் பெருக்கி
அரங்கன் யான் பெருந்துணை புரிவேன்
துணை புரியவே குடிலின் வாகனங்கட்கு

13. சர்வ பாதுகாப்பும் தொண்டர்களுக்கு
பயணத்தில் பாதுகாப்பும் தொண்டு வழியில்
எந்த இடையூறும் வாராத வண்ணம்
சர்வ பாதுகாப்பும் கூட்டி அரங்கன் துணை வருவேன்

14. ஐயமற குடிலின் அன்னதானம்
கிராம அன்னதானம் அல்லாது
இன்னும் குடிலின் துறையூர்
மையப் பகுதியில் இருந்து

15. இன்னும் பலவாறு பல கிலோமீட்டருக்கு
இன்னும் கிளைகளாக பிரிந்து பிரிந்து
மேலும் தர்மங்கள் வளரவும் விரிவடையவும்
அரங்கன் என் சேவை வளர்ந்து நிற்க இருக்க

16. அப்பனே அளவிலா வண்ணம்
சக்தி கூட்டி அதற்கேற்றவாறு
பொருளாதார பலமும் கூட்டி
அரங்கன் அருள் செய்யவே

17. செய்யவே இதுகாலம் சிறப்புடன்
என் தொண்டர்களெல்லாம்
ஆரோக்கியமும் மனபலமும்
இவர்களெல்லாம் ஒருவரோடு ஒருவர்

18. சமதர்ம சமத்துவ சகோதரத்துவ வண்ணம்
சாற்றிடுவேன் சன்மார்க்க வழி இணைந்து
பேராற்றல்பட இயங்க அரங்கன் யான்
இன்று ஆசியும் பரிபூரண பாதுகாப்பும் பலமும் தந்தேன்

19. பலமுற தர்மத்தின் வழி
பழுதின்றி மகா சக்திகள்
எல்லா திக்கிலும் பரவி
கிளைகளிலும் சரி தலைமை இந்த சங்கத்தின்

20. செயல்பாடுகளிலும் சரி
எந்த பிழையும் நேரா வண்ணம்
பெரும் பாதுகாப்பு கூட்டி
அரங்கன் அருள் செய்வேன்

21. அருளவே நிர்வாகத்திலும்
ஆற்றல்பட கிளையாக இயங்குகின்ற
ஒவ்வொரு கிளைசங்க நிர்வாகத்திலும்
அரங்கன் யான் மகத்துவம் கூட்டி

22. அனைவரையும் ஒன்று சேர்த்து
அவரவர்கள் செயலும் ஆக்கமுடன்
வெற்றியடையவும் விரிவடையவும்
பாதுகாப்பாய் செயல்படவும்

23. பேரற்புதம் புரிவேன் ஆகவே என்
சீடர் பெருமக்களே அவசியம்
தலைமை பீடமாம் துறையூர்
ஓங்காரக்குடில் நோக்கி உலகளாவிய

24. வண்ணம் உள்ள கிளை சங்கங்களும் சரி
ஒன்றிணைந்து வந்து மாதாந்திரம்
இரு திங்கட்கு ஒரு முறை
வருடாந்திரம் பலமுறை என வந்து

25. குடிலின் தொடர்பு கூட்டி
இந்த தலைமை பீடத்தில்

கட்டாயம் பொருளுதவி செய்து
தக்கபடி அரங்கன் என் ஜோதியை

26. நேரிடை நின்று சேவித்து
தியானித்து பூரண சக்தி பெற்று
அவரவர்கள் தொடர்ந்து இயங்க வேணும்
இதன் மூலம் அரங்கன் மகா சக்தியூட்டி

27. எல்லோரையும் ஞானிகளாக்கும்
வல்லமையை வரமாகத் தந்து அருள் புரிவேன்
அருளவே அரங்க மகான் யான்
அருளிய அருளாசி விளக்கம் முற்றும் முற்றே.

—சுபம்—